ஒரு பாதுகாப்பான இறக்கையின் கீழ் வளருங்கள்

**உலகளாவிய விருந்தோம்பல்**
**கல்வியில் உள்நாட்டு வர்த்தக நாமம்**

# இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்

**01. பணிப்பாளர் - நிதி (HM 1-1 வகுதி) - கொழும்பு**

ஒரு ஆற்றல்மிக்க தனிநபருக்காக திறக்கப்பட்டுள்ளது.

- வரவு செலவுத்திட்ட நிர்வாகம், நிறுவனத்தின் நிதிக் கொள்கை மற்றும் அது தொடர்பான நடைமுறைகளை திறம்பட நிர்வகித்தல்
- பணப்புழக்க முகாமைத்துவம், கடன் கண்காணிப்பு, காசாளர் கடமைகள், வருமானக் கணக்காய்வு, கிரயம், சமுத்ரா ஹோட்டல் மற்றும் நிறுவனத்தின் அனைத்து கணக்குகளைக் கண்காணித்தல்.
- நிறுவனத்தின் நிதி முன்னறிவிப்பு மற்றும் பகுப்பாய்வுகளுக்கு பொறுப்பு கூறுதல்
- முகாமைத்துவச் சபையினால் பிரதான நிறைவேற்று அதிகாரியின் வகிபாகத்திற்கு உதவுவதற்காக நிதிப் பணிப்பாளர் பதவிக்கு விசேடமாக ஒப்படைக்கப்பட்டுள்ள முகாமைத்துவ வேலைகளை நிறைவேற்றுதல்.

**விண்ணப்பதாரரின் தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி / கணக்கியல் /வர்த்தகம் / நிதி முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் தொடர்பான ஒரு இளமாணிப் பட்டம்

   **அத்துடன்**

   நிதி / கணக்கியல் / வர்த்தகம் / நிதி முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டப் பின்படிப்பு பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் (ICASL/ CIMA/ ACCA) அங்கத்துவம் அல்லது இயைபுடைய தொழில்சார் நிறுவனமொன்றின் வேறு ஏதாவது சமமான தகைமைகள்.

   **மற்றும்**

   கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை / நிறுவனமொன்றில் அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார்துறை நிறுவனமொன்றில் நிதித் துறைக்கு இயைபாக முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட கால அனுபவம்.

2. தொழில்சார் நிறுவனமொன்றின் (ICASL/ CIMA/ ACCA) முழுமையான அங்கத்துவம் அல்லது இயைபுடைய தொழில்சார் நிறுவனமொன்றின் வேறு ஏதாவது சமமான தகைமைகள்.

   **அத்துடன்**

   கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை / நிறுவனமொன்றில் அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார்துறை நிறுவனமொன்றில் நிதித் துறைக்கு இயைபாக முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட கால அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமை தேவைப்பாடுகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
02. பதவிக்கு இயைபான விடயத்துறையில் மத்திய முகாமைத்துவ மட்டத்தில் (MM) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகாலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:**

35 வயதிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

இதில் உங்களுக்கு என்ன கிடைக்கின்றது

**சம்பள அளவு:** HM 1-1 - 2016 ரூபா (80,295 – 15 x 2,270 – 114,345)

ஆரம்ப நிலை: ரூபா 80,925.00 + வாழ்க்கைச் செலவுப் படி + தொடர்புடைய மாதாந்தக் கொடுப்பனவு போனஸ் கொடுப்பனவு மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செயற்றிறன் அடிப்படையில் செலுத்தப்படும். மாதாந்த தொழில்சார் கொடுப்பனவு, வாகனம் / எரிபொருள் கொடுப்பனவு என்பன அரசாங்க சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் வழங்கப்படும்.

**ஏனைய தகவல்கள்**

01. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான (EPF மற்றும் ETF) பங்களிப்பு
    - அ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியரின் ஒன்றிணைந்த சம்பளத்தில் 10%, தொழில் வழங்குநரினால் 15% பங்களிப்பு செய்யப்படும்.
    - ஆ) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு தொழில் வழங்குநரினால் 3% பங்களிப்பு செய்யப்படும்.
02. ஊழியர் அல்லது அவரது குடும்பத்தினருக்கு கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்.
03. போக்குவரத்துக் கொடுப்பனவு வழங்கப்படும்.
04. பின்வருவனவற்றைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
    - ஒரு மணித்தியாலத்திற்குள் பணியாற்றும் இடத்திற்கு நாளாந்தம் வரக்கூடியவர்கள்
    - உயர்ந்த கணனி ஆற்றல் கொண்டவர்கள்
    - இரு மொழிகளில் ஆற்றலுடையவர்கள் (சிங்களம் / ஆங்கிலம்)

**அனைத்து விண்ணப்பதாரர்களும்:**

அ. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

ஆ. பதவியின் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு விருப்பமுடையவராக இருத்தல் வேண்டும்.

ஈ. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

முழுமையான சுயதரவு விபரங்கள் சகிதமான விண்ணப்பங்களை, கல்வித் தகைமைகள், சேவை அனுபவம் போன்ற இயைபுடைய சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர் சகிதம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு 2024-06-30ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**கவனிக்கவும்:** யாருடைய ஆதரவையும் பெற முயலுதல் தகைமையீனமாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

முழுமையற்ற, மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திராத மற்றும் முடிவுறுத்தல் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விருந்தோம்பல் கல்வியின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் எங்களுடன் இணையுங்கள்!**

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்,**
**இல. 78, காலி வீதி,**
**கொழும்பு - 03.**

**பொதுவான விசாரணை: 011 - 2208300 நீடிப்பு 303/372**
**மேலதிக விபரங்களுக்கு: www.slithm.edu.lk**